விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 | ஆடி 13 | ஷவ்வால் 7 | இதழ் 166
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 29—7—82

## ஜனாதிபதிதேர்தலில்கூட்டணி பங்கெடுத்துக் கொள்ளாது

### ஜனாதிபதியிடம் கூறிவிட்டதாக கூட்டணித்தலைவர் தகவல்

(மட்டுவில்)

''தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதி தேர்தலில் பங்கெடுத்துக்கொள்ள மாட்டாது என்று எமது செயலாளர்நாயகம் அன்று ஜனாதிபதியிடம் கூறிவிட்டார். ஆனால் இன்றோ ஏன் அப்படிக் கூற வேண்டும், ஏன் தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதி தேர்தலில் பங்கெடுத்துக் கொள்ளக்கூடாது?என்று கேள்விக் கணைகள் தொடுக்கின்றனர்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவரும் நல்லூர் தொகுதி எம். பி யுமான திரு. மு. சிவசிதம்பரம் சாவகச்சேரியில் நடந்த கூட்டத்தில் கூறினார்.

சாவகச்சேரி தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச் சபைக் கூட்டத்தில் திரு. சிவசிதம்பரம் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

பொதுச்சபைக் கூட்டத்திற்கு திரு, வி. என். நவரத்தினம் தலைமைவகித்தார்.

(8 ம் பக்கம் பார்க்க)

★ மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு அதிகாரம் இல்லை என்ற கூற்றை

# அமைச்சர் வாபஸ் பெறும்வரை

# சபைக் கூட்டம் நடக்காது!

## மட்டக்களப்பு மா. அ. சபைத் தலைவர் 'போர்க்கோலம்'

[மட்டக்களப்பு நிருபர் இரா. துரைரத்தினம்]

**மாவட்ட அபிவிருத்தி சபைகளின் அதிகாரம் குறித்து அமைச்சர் தேவநாயகம் தெரிவித்த முரண்பாடான கூற்றை அவர் வாபஸ்பெறும் வரை, மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைக்கூட்டம் நடத்தப் படமாட்டாது என்று மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. எஸ். சம்பந்தமூர்த்தி அறிவித்துள்ளார்.**

''மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை. இச்சபைகளினால் பிரயோசனமும் இல்லை; இவை வெறும் கைப்பொம்மைகளே'' என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கே. டபிள்யூ. தேவநாயகம் கூறிய கூற்றை அவர் வாபஸ் பெறும் வரை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைக்கூட்டம் நடத்தப்பட மாட்டாது என்று மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. எஸ். சம்பந்தமூர்த்தி செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது.

'மாவட்ட அபிவிருத்தி சபைகள் அரசாங்கத்தின் மாவட்டரீதியான நிர்வாக இயந்திரமாகவும், பூரண ஆளுமைபெற்ற சபைகளாகவும் திகழும் என்றும் ஜனாதிபதி அபிவிருத்தி சபை சட்டமூலத்தில் உறுதி அளித்துள்ளார். இந்நிலையில், இச்சபைகள் அதிகாரமற்ற வெறும் கைப்பொம்மைகள் என்றும், தலைவருக்கு எந்தவித அதிகாரமும் இல்லை என்றும் இச்சபைகளுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் கூறியிருப்பது அரசின் கருத்தா?அல்லது மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டணி மாவட்டசபை அதிகாரத்தைக் கைப்பற்றிவிட்ட என்ற ஆற்றாமையால் எழுந்த அமைச்சரின் தனிப்பட்ட கருத்தா? என நான் அறியவிரும்புகிறேன்?

(8-ம் பக்கம் பார்க்க)

## அரசுகையேற்றநிறுவனங்கள் கூட்டுத்தாபனமாகும்

### அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் பொறுப்பேற்ற நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் ஆக்கப்படஉள்ளன.

அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட நிறுவனங்களை அவசியம் ஏற்படும் பட்சத்தில் கூட்டுத்தாபனமாக்கவேண்டும் என்ற நிதிஅமைச்சர் திரு. றொனிடி மெல்லின் ஆலோசனையை அமைச்சரவை நேற்று ஏற்றுக்கொண்டனது.

### ஆசிரியர் ஓய்வூதியம்...

ஆசிரியர்கள் ஓய்வூதியம் பெறுவதில் ஏற்பட்டுவரும் நீண்டகால தாமதத்தைத் தவிர்ப்பதற்கு ஒய்வூதியம்தயாரிக்கும்பணியில் கம்யூட்டரைப் பயன்படுத்துவதென்றும் அமைச்சரவை தீர்மானித்தது.

ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் இது தொடர்பான ஆலோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார். (இ)

## யாழ்.நகரில் பாண்டியன்

(யாழ்ப்பாணம்)

ஜனசக்தி' பத்திரிகை ஆசிரியரும் தமிழக அரசு பாரதி நூற்றாண்டு விழாக்குழு உறுப்பினருமான திரு. தா.பாண்டியன் யாழ்ப்பாணத்திக்கு விஜயம் செய்துள்ளார்.

வடபகுதியைச் சேர்ந்த எழுத்தாளர் குழு நேற்று மாலை திரு. பாண்டியனைச் சந்தித்து, சிறுகதை இலக்கியம் முற்போக்கு இலக்கியம் சம்பந்தமாக உரையாடல் நடாத்தியது.

இந்திய – இலங்கை எழுத்தாளர்களின் நிலைமைகள்

(8-ம் பக்கம் பார்க்க)

## கலையரசுக்குப் பிரதமர் அஞ்சலி!

### கொழும்புக் கலைஞர்களும் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

ஈழத்தமிழ் நாடகத்தந்தை கலையரசு சொர்ணலிங்கத்தை பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா கௌரவித்தார்.

நேற்று முன்தினம் மாலை நடந்த இறுதிச் சடங்கில் பிரதமரின் விசேஷ பிரதிநிதியாக கொழும்பு மாவட்டசபை உறுப்பினர் திரு. நோபல் வேதநாயகம் கலந்து கொண்டு இறுதிமரியாதையைச் செலுத்தினர்.

கலையரசுவின் மறைவுச் செய்தியைத் தெரிந்த உடனேயே பிரதமர் அவரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள ஏற்பாடுகளைச் செய்தார் என்றும் அவசர வேலைகள் காரணமாக கலைத் தொடர்புள்ள திரு. தேவநாயகத்தைக் கலந்து கொள்ளும்படி அவர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மானிப்பாய் பிப்பிலி மாயானத்தில் சிதைக்கு தீ வைக்கிற சமயத்தில், நோபலும், அவரது கோஷ்டியினரும் வந்து சேர்ந்தனர். பிரதமரின் சார்பில் தாம் கலந்து கொண்டதை திரு. நோபல் தெரிவித்தார்.

கொழும்பு கலைச்சங்கம் எஸ். பாலச்சந்திரன் கலைஞர் கே. ஏ. ஜவாஹர், அப்புக்குட்டி,

(8-ம பக்கம் பார்க்க)

## காங்கேசன்துறை நாகபட்டினம் கப்பல்சேவைக்கு அபிவிருத்திசபை பணம் ஒதுக்கீடு!

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை – நாகபட்டினம் கப்பல் சேவை நடாத்துவது குறித்து யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபை பொதுக் கூட்டத்தில் நேற்று பிரேரணை கொண்டுவரப் பட்ட போது அப்பிரேரணை திருத்தத்துடன் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டதுடன், கப்பல் சேவை நடாத்துவதற்கான ஆரம்பவேலைகளுக்கு முப்பதாயிரம் ரூபாவையும் அபிவிருத்தி சபை ஒதுக்கியுள்ளது.

யாழ். செயலகத்திலுள்ள அபிவிருத்திசபையின்சபாமண்டபத்தில் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. க. நடராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு ந. இராசேந்திரன் கப்பல் சேவை நடாத்தும் தீர்மானத் கொண்டுவந்தார்.

பருத்தித்துறை எம். பி திரு. க. துரைரத்தினம் இத்தீர்மானத்தைஆதரித்துப் பேசுகையில், எல்லா அபிவிருத்தித் திட்டங்களையும் காங்கேசன் துறையில் செய்வதால் பலசிக்கல்கள் தோன்ற வழிபிறக்கும் என்றும், காங்கேசன்துறையிலும் பார்க்க கப்பல் போக்கு வரத்துச்சேவைக்கு பருத்தித் துறைத் துறைமுகம் சகல வசதிகளையும் கொண்டிருக்கிறதென்றும் சொன்னார்.

நல்லூர் எம். பி. திரு.எம். சிவசிதம்பரம் மேலும் ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்து பேசுகையில், நல்லூரில் துறைமுகம் இல்லாதலால் அங்கு கப்பல் சேவை நடாத்தமுடியவில்லை என்று நகைச்சுவையுடன் சொல்லிக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கும் இந்தியாவுக்குமிடையே கப்பல் சேவை நடாத்துவதென்று உறுதியாக எடுத்துக்கொள்வோம் என்றார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் சாக்கில் அனாதரவாகக் கிடந்த திருட்டுப்போன பொருட்கள்!

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை 3-ம் கட்ட வேலைப்பிரிவிலிருந்து திருட்டுப்போன பொருளில் ஒரு பகுதி மீட்கப்பட்டதையடுத்து மிகுதி பொருட்கள் சாக்கு ஒன்றில் சுற்றி தொழிற்சாலை வளவிற்குள் கொண்டுவந்து போட்டுவிட்டுச் சென்றனராம்

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 3-ம் கட்ட வேலைப்பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 5800 ரூபா பெறுமதியான மோட்டர் கியர் வீல் ஆகிய பொறியியல் உதிரிப்பாகங்கள் திருட்டுப்பற்றி காங்கேசன் துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டிருந்தது.

இதுகுறித்து விசாரணை செய்த பொலிசார் சந்தேகத்தின் பேரில் செல்லத்துரை செல்வரத்தினம், பெரிய தம்பி நடராஜா சோமதாசா ஆகிய மூவரையும் கைது செய்து திருட்டும் போன பொருளில்

[8ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## தேவை

நன்கு காய்ந்த எலுமிச்சம் கோது தேவை, மில்க்வைற்– யாழ்ப்பாணம். 4012

அறை தேவை. தொடர்பு: இரத்தினவேல், பொலிஸ் திணைக்களம், யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம் 222, (General office). 4021

## விற்பனைக்கு

பதிவு செய்யப்படாத புனரமைக்கப்பெற்ற Isuzu–ELF150 15 சீற் கைறூவ் 1979 மொடல் வானும் C/90 ஹொண்டா மோட்டார் சைக்கிள்களும் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன் கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3930

## பயிற்சி

றேடியோ–டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங், வெல்டிங், Hotel Management, மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி வகுப்புக்கள் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பம் 30–07–82. அனைவரும் சேரலாம். நேரில் வரவும். நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3970

யாழ்ப்பாண மாவட்ட

## நீதிமன்றத்தில்

வட்டுக்கோட்டை கிழக்கு பொன்னம்பலம் குலவீரசிங்கம் என்பவரின் மரணசாதனமெழுதப்பட்ட சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

வழ. இல. தத்துவம்/3604

பொன்னம்பலம் குலவீரசிங்கம் கைம்பெண் தங்கத்திரவியம் வட்டுக்கோட்டை கிழக்கு, வட்டுக்கோட்டை

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கானது மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்து நிர்வாகத் தத்துவப் பத்திரம் பெறுவதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டதெனவும் 1982ம் ஆண்டு மாசி மாதம் 26ந் திகதி அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும்முற்றுனகட்டளை பதியப்பட்டுள்ளதெனவும்இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1982ம் ஆண்டு வைகாசி மாதம் 21ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்
பதிவாளர்

வரைவு:

க. குணரத்தினம்
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி, 4008

## இன்று ஆய்வரங்கு

[பண்டத்தரிப்பு]

தேசிய கலை இலக்கியப் பேரவை பாரதி நூற்றுண்டை முன்னிட்டு நடாத்தி வரும்ஆய்வரங்கின் ஏழாவது ஆய்வரங்கு யாழ் றிம்மர் மண்டபத்தில் பேராசிரியர் க. கைலாசபதி தலைமையில் இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது. [க]

# துப்பாக்கி ஏந்திஞல்மட்டும் விடுதலை'பெற்றுவிடமுடியாது

[வவுனியா]

துப்பாக்கியை ஏந்திஞல் மட்டும் விடுதலைபெற்றுவிட முடியாது. தனிநபர் பயங்கரவாதம் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டும். மகாத்மா காந்தி, தேசிய காங்கிரசை கீழ்மட்டத்திலிருந்து கட்டி எழுப்பியதனுலேயே இந்தியா சுதந்திரம் பெற்றது. அதே போன்றுதான் இங்கும் கீழ் மட்டத்திலிருந்து ஒரு முறையான அமைப்பு உருவாக்கப்படவேண்டும். அவ்வாறு இயங்குவதன்மூலமே விடுதலை பெறமுடியும்''

இவ்வாறு தமிழீழ விடுதலைக் கழக அமைப்புச் செயலாளர் திரு. இரா வாசுதேவா வவுனியாவில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலையை விரும்புகின்ற விடுதலைஉணர்வு கொண்ட அமைப்புத்தான் தமிழீழ விடுதலைக்கழகம் என்றும் கூறிய அவர் மேலும் கூறியதாவது:

தமிழீழத்தின் 7 மாவட்டங்களிலும் மாவட்ட அமைப்பாளர் தீவிரமாக செயல்பட்டுவருகின்றனர். 1980ம் ஆண்டு கூட்டணியிலிருந்து வெளியேற்றப்பட்டோரின் ஒருபகுதியினரே தமிழீழ விடுதலை சழகத்தினை முன்நடத்தி

[7–ம் பக்கம் பார்க்க]

மனுதாரின் சட்டத்தரணி
த. சோமசுந்தரம்
93/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

யாழ்ப்பாணம் மூர்வீதி முகிதீன் பள்ளிவாசல் ரேட்டு, 20ம் இலக்கத்தைச் சேர்ந்த மரணசாதனமின்றி மரணமெய்திய முகம்மது அபூபக்கர் சமூன் என்பவரது மரணச்சொத்து விடயமாக.

மரணமெய்தியவர்

மீராலெப்பை மரிக்கார் அபூபக்கர், 20, முகிதீன் பள்ளிவாசல் ரேட்டு, மூர்வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணச்சொத்து )இல. 3632
நியாயாதிக்கம்)

எதிர்

மீராலெப்பை மரிக்கார் அபூபக்கர் பெண் சுபைத்தா இல. 20, முகிதீன் பள்ளிவாசல் ரேட்டு, மூர்வீதி, யாழ்ப்பாணம்.

எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு மாசிமாதம் 19 ஆம் நாளன்று முற்பகல் 8–30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்ருர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

தா. குலஞானம்
பதிவாளர்

1982ஆம் ஆண்டு 2ம் மாதம் 5 ஆம் நாள் என்னுல் வரையப்பட்டது.

மனுதாரின் பதிவு பெற்ற சட்டத்தரணி.

14–5–82 காரணம் காட்டும் திகதி 6–8–82க் ககப்பட்டுள்ளது

தா. குலஞானம்
பதிவாளர்
4009

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம்

புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற அம்பலவாணர் கன்னையாவின் மரணசாதமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

வழ. இல: ரி/71

கன்னையா கைம்பெண் மனேன்மணி 2ம் வட்டாரம், புங்குடுதீவு.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு ஆவணி மாதம் 6ம் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

1982ம் ஆண்டு ஆனி மாதம் 29ம் திகதி

மன்றின் கட்டளைப்படி

(590) அ. சிறில்
பதிவாளர்

வரைதல்

(890) செ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி
4017

## உடன் விற்பனைக்கு

இயக்கச் சந்தியிலிருந்து ½ மைல் தூரத்தில் தென்னந்தோட்டம், வயல்களுடன் கல்வீடும் அடங்கிய காணி விற்பனைக்குண்டு. சந்தியிலிருந்து தோட்டம் வரை நல்ல பாதை உண்டு.

விபரங்களுக்கு;

முதலியார் கார்த்திகேசு,
''ரூபி வில்லா'', வல்வெட்டித்துறை.
தொலைபேசி: 6 (4004)

## அறிவித்தல்

ஸ்ரீ சர்வ மங்களேஸ்வரி அம்பிகை ஆலய கட்டிடநிதி
மயிலணி – சுன்னுகம்

தவிர்க்க முடியாத சில காரணங்களால் 4–8–82 என இருந்த சீட்டிழுப்பு 2–9–82க்குப் பிற்போடப்பட்டிருக்கிறது என்பதை அறியத்தருகிறேம். நண்பர்களின் ஆதரவை என்றும் எதிர்பார்க்கிறேம்.

டாக்டர் செ. சண்முகநாதன்
கமலாதேவி. சண்முகநாதன்
4020

## 1-வது நினைவஞ்சலி

சாந்தா குமாரசாமி (சாந்தி)

பலர்வு: 18–7–62 உதிர்வு: 9-8–81



அமைதியின் உறைவிடமே, எம் அன்புத் தெய்வமே நாங்கள் உங்கள் மேல் உயிரையே வைத்திருந்தோம் என்பதையும் மறந்து படித்து முடிக்க முடியவில்லையே என்ற ஒரே காரணத்திற்காக எம்மையெலாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றுவிட்டீர்களே இப்பிரிவை எப்படி அம்மா எங்களால் தாங்கிக்கொள்ள முடியும்?

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்களை நினைத்துருகும்

அம்மா, அண்ணுமார், அக்காமார், அன்புக்குரியோர்

55, ஆடியபாதம் வீதி, நல்லூர். (4014)

நாணுட்டான் பகுதி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
முருங்கன்

## பதவி வெற்றிடம்

### பொதுமுகாமையாளர் தரம் 111

நாணுட்டான் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு பொதுமுகாமையாளர் தரம் 111 பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**தகமைகள்:**

(அ) கூட்டுறவு பயிற்சி பெற்றுள்ள பட்டதாரி அல்லது

(ஆ) 3 வருட கால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தர தராதரப்பத்திரம் பெற்றவர் அல்லது

(இ) 5 வருட கால அனுபவம் பொருந்திய முன்னை நாள் கூட்டுறவுப் பரிசோதகர், அல்லது

(ஈ) ரூபா 20 இலட்சத்தினை வருடாந்த மொத்த விற்பனையாகக் கொண்ட வியாபாரத்தாபனம் ஒன்றின் மேல்மட்ட முகாமைப்பதவியொன்றில் 3 வருட கால அனுபவம் உடைய ஒருவர்.

**வேதனம்:**

340 — 590
.........................
15X10 — 20X5

(கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு அங்கீகாரம் பெறப்படும்வரை இப்பதவி தற்காலிகமானதாகும்)

**வதிவிடத்தகமை:**

(அ) மன்னர் மாவட்டத்தில் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்
(குறைந்தது 2 வருடங்கள் என்கிலும் மன்னர் மாவட்டத்தில் வசிப்பவராக இருக்கவேண்டும்)

(ஆ) இம்மாவட்டத்தில் தகுதியானவர் இல்லாத பட்சத்தில் வெளிமாவட்டத்தில் இருந்து இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுவார்கள். தெரிவு செய்யப்படுபவர் சங்க எல்லைக்குள் தனது வதிவிடத்தை அமைத்துக்கொள்பவராக இருத்தல் வேண்டும்.

**வயது:**

25 — 50ற்கு இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.

இச்சங்கத்தால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப்பத்திரத்திற்கு ரூபா 10/- செலுத்தி தபால் மூலமோ, நேரடியாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் யாவும் 07–8–82–ந் திகதி காலை 10–00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக

''தலைவர், நாணுட்டான் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், முருங்கன்''

என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பொதுமுகாமையாளர் தரம் 111 பதவி'' எனக் குறிப்பிடப்படல்வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர் சங்கத்தால் கேட்கப்படும் பிணையை உடன் செலுத்த ஆயத்தமாக இருக்க வேண்டும்.

செ. மரியாம்பிள்ளை,
தலைவர்,

நாணுட்டான் பகுதி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
முருங்கன்.

1982–07–22. (3995)

# இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்:

# 100பேர் பலி 200பேர்காயம்!

## செஞ்சிலுவைச் சங்கக்கட்டடமும் பெரும் தாக்குதலுக்குள்ளானது!

பெய்ரூட், ஜூலை 28

லெபனனில் நடைபெற்றுவரும் சண்டையில் கடைசியாகக் கிடைத்த தகவலின்படி இஸ்ரேலியப்படைகளின் தாக்குதலினுல் கடந்த இரண்டு நாட்களில் மட்டும் 100 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் 200 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இஸ்ரேலிய விமானங்கள், கவச. டாங்கி, பீரங்கி வண்டிகளின் துணையுடன் இத் தாக்குதல்களை நடத்தின.

**செஞ்சிலுவைச் சங்கம்**

லெபனனில் போரினுல் பாதிக்கப்பட்டவர்களை பராமரிக்கவென இயங்கிவரும் செஞ்சிலுவைச் சங்கத்தவரின் கட்டிடமொன்றும் இஸ்ரேலியப் படைகளின் தாக்குதலுக்குள்ளானது. இதனுல் இச் சங்கத்தின் ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டார். வேறும் சிலர் காயமடைந்தனர். செஞ்சிலுவைச் சங்கம் இத்தாக்குதல் குறித்து தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது. இச் சங்கத்தின் பிரதிநிதியொருவர் தெரிவித்த கருத்தில்; இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் இவ்வாறு தமது சங்கம் கடுமையாகத் தாக்கப்பட்டது இதுவே முதற் தடவையெனத் தெரிவித்தார்.

லெபனனிலுள்ள செஞ்சிலுவைச் சங்கத்தினர் இங்கு தாம் தங்கியிருக்கும் இடங்களிலும், வேலைத் தளங்களிலும் தமது சங்கக் சொடியினைப் பறக்கவிட்டிருப்பதுடன், அவர்களுக்குரிய வாகனங்களிலும் அவற்றினைப் பொருத்தி தம்மை இலகுவாக இனங்கண்டு கொள்ள வழிவகைகளைச் செய்துள்ளனர். எனவே இவ்வாறு தம்மைப் பாதுகாக்க முனைந்த போதிலும் தாம் தக்கப்பட்டது குறித்து செஞ்சிலுவைச் சங்கத்தவர் மிகவும் கவலை கொண்டுள்ளனர்.

**பேட்டி**

லெபனன் பிரதமர், பாலஸ்தீனத் தலைவர் ஜனுப் அரபாத் ஆகியோரை பத்திரிகையாளர் சந்தித்து சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள அமெரிக்கரான திரு. பிலிப்ஹபிப் குறித்து கேள்வி எழுப்பியபோது, அவரது பேச்சுவார்த்தைகளின் முடிவை தாம் மிக ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாகவும், அமெரிக்காவுக்கு லெபனன், இஸ்ரேல் தகராறைத் தீர்த்து வைக்க வேறு சந்தர்ப்பங்கள் இனி வரப்போவதில்லை என்றும் தெரிவித்தனர்.

பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தால் நிலைமை எப்படியிருக்குமென வினவப்பட்டபோது, பெரும் அழிவே ஏற்படும் என்று லெபனன் பிரதமர் ஆணித்தரமாகக் கூறினுர்.

இது இவ்வாறிருக்க இஸ்ரேல் அரசு தனது நாட்டின் கல்கிலியா என்ற பிரதேசத்தின் நகர முதல்வரையும் பதவிநீக்கஞ் செய்துள்ளது. பதவியிழந்த பிரஸ்தாப நகர முதல்வரான அமீன் நாஸரீ என்பவர் பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாக இருந்தார் என்பதே அவரது பதவிநீக்கத்துக்கான காரணமென்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## உலக அழகுராணியாக கனேடியப் பெண்தெரிவு! போட்டி இடத்தில் வெடிகுண்டு!

லிமா, ஜூலை 28

பேருவில் நடைபெற்ற 1982-ம் ஆண்டுக்கான உலக அழகு ராணிப் போட்டியில் கனடாவைச் சேர்ந்த செல்வி கரென் டயானி பாலட்வின் என்ற 18 வயதான மாணவி உலக அழகு ராணியாகத் தெரிவானுர்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் இத்தாலியைச் சேர்ந்தவர் இரண்டாமிடத்தையும், மூன்ருமிடத்தை கிறீஸையும், அமெரிக்காவையும் சேர்ந்தவர்களும் பெற்றுக்கொண்டனர்.

உலக அழகு ராணியாகத் தெரிவான கனேடியப் பெண்ணுக்கு கடந்த ஆண்டின் அழகு ராணியான வெனுசுலாவைச் சேர்ந்த ஐயனுசேஸ் வெற்றி பெற்றமைக்காக வழங்கப்படும் 'முடியினை' அணிவித்தார்.

கடந்த வாரம் முழுதும் இப்போட்டியை ஒழுங்கு செய்த நிறுவனங்கள் தீவிர பிரசாரங்களில் இறங்கியிருந்தன

உலக அழகு ராணிப்போட்டி நடைபெற்ற இடத்திற்கருகில் வெடிகுண்டொன்றைத் தாம் கண்டெடுத்ததாக பெருவியன் பொலிஸார் தெரிவித்தனர். (கி)

## மகாராணியின் மெய்காப்பாளர் மன்னிப்புக் கோரினுர்

லண்டன், ஜூலை 28

பிரிட்டிஷ் மகாராணியாரின் பிரத்தியேக மெய்க்காப்பாளராக இருந்து தம்மீது சுமத்தப்பட்ட அவதூறு ஒன்றினையடுத்து ராஜினுமாசெய்த கொமாண்டர் மைக்கல் டிறெஸ்ரிரெயில் மகாராணியாரிடம் மன்னிப்புக்கோரியுள்ளார்.

தமக்கேற்பட்ட அவதூருல் அரசகுடும்பத்துக்கும் மகாராணியாருக்கும் ஏற்படக்கூடிய மனக்கலவரத்தை கருத்தில் கொண்டே கொமாண்டர் மைக்கல் இவ்வாறு மன்னிப்புக்கோரியுள்ளார்.

பலகாலம் மகாராணியாரின் மெய்க்காப்பாளராக அதிமுக்கிய நிகழ்ச்சிகளிலும் பயணங்களிலும் பவனிகளிலும் இவர் கடமைபுரிந்துவந்தார். தன்னினச் சேர்க்கையில் பலகாலம் தம்முடன் இவர் ஈடுபட்டிருந்ததை அம்பலமாக்கப்போவதாக ஒருவர் பத்திரிகையொன்றின் மூலமாகத்தெரிவித்திருந்தார். இதனையடுத்தே கொமாண்டர் மைக்கல் இத்தகவல் உண்மையானதெனத் தெரிவித்து ராஜினுமா செய்திருந்தார்.

அரச குடும்பத்துக்கு இந்த ராஜினுமாவால் ஏற்படும் சங்கடங்களுக்கு அவர்களிடம் கொமாண்டர் மைக்கல் மன்னிப்புக் கோரியதுடன் தாம் பணியாற்றிய இங்கிலாந்து பொலிஸ்திணைக்களத்துக்கு தம்மால் ஏற்படக்கூடிய இழுக்குக் குறித்தும் ஆழ்ந்த கவலைகொண்டுள்ளதாகத் தெரிவித்தார் [கி]

# சிதறிவெடிக்கும் குண்டுகள்:

## இஸ்ரேலுக்கு அமெரிக்கா கைவிரிப்பு!

வாஷிங்டன் ஜூலை. 28

இஸ்ரேலுக்கு, மிகவும் சக்தி வாய்ந்த 'கிளாஸ்டர்' ரகக் குண்டுகளை அமெரிக்கா விநியோகிக்கமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை அமெரிக்க காங்கிரஸில் ஜனுதிபதி றீகன் இவ்வறிவித்தலை வெளியிட்டார்.

'கிளாஸ்டர்' ரகக்குண்டுகளை இஸ்ரேலியத் துருப்புகள் தமது ஊடுருவல்களின்போது கெரில்லாக்களின் நிலைகள் உட்பட, பொது மக்களினதும் குடியிருப்புக்களிலும் பிரயோகித்தனவெனக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அமெரிக்கதயாரிப்பு 'கிளாஸ்டர்' குண்டுகள் மிகவும்ஆபத்தானவையும், சக்திமிக்கவையுமாகும். இவை பிரயோகிக்கப்பட்டதும் சென்றுவிழும் இலக்கிலிருந்து பரந்த பிரதேசத்துக்குச் சிதறி வெடிக்கும். இதனுல் தாக்கப்படவேண்டிய இலக்குடன், அதனை அண்டியுள்ள பரந்த பிரதேசத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளும் தாக்குதலுக்குள்ளாகும். இத்தகைய குண்கடுள், துருப்புகள் பெருமளவில் தங்கியிருக்கும் பரந்த போர்க்களங்களில் மட்டுமே உபயோகிக்கப்படுவனவாகும்.

இஸ்ரேலின் கிளாஸ்டர்குண்டுப் பிரயோகத்தால் பலியான பல பாலஸ்தீன, லெபனன்குடி மக்களில் சிறுவர்களும் அதிக அளவு அடங்குகின்றனர் (கி)

★ டெருசோ சிப்ஸ்
(Terrazzo chips)
எல்லா நிறங்களிலும் இறக்குமதி செய்யப்பட்டது.
★ காபரண்டம் பொலிஷிங் கற்கள்
★ நிலம் வெட்டும் மெஷின்கள்
★ அலுமினியம் தகடுகள் (Strips)
★ "ஸ்நோகிறீட்" வெள்ளை சிமெந்து ரூபா 12/- ஒரு கிலோ
★ பட்லோ வாட்டர் புருவ் சிமெந்து ரூபா 30/- ஒரு கிலோ
★ கலர் பவுடர் எல்லா நிறங்களிலும்
★ பேர்ட் பிருன்ட் லாச்சி, நைட் லாச்செஸ் மோர்டிஸ் பூட்டுகள்
★ தரைக்கு டெருசோ இடுதல் வேலையும் ஒப்புக்கொள்கிறோம்.

ரும்சன்ஸ்
ஹார்ட்வெயர் என்டர்பிரைஸ் லிமிட்டெட்,
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு — 12
தொலைபேசி: 31511-34411

## இன்று தொலைபேசி இணைப்பு

[சாவகச்சேரி]

சங்கத்தானை உப தபால் நிலையத்திற்கு இன்று பிற்பகல் தொலைபேசி இணைப்பை சாவகச்சேரி எம்.பி. திரு. வி.என். நவரத்தினம் ஆரம்பித்துவைப்பார்.

சாவகச்சேரி நகரசபைத்தலைவர் திரு.சி.க. மயில்வாகனம், மற்றும் உறுப்பினர்கள்கலந்து கொள்வார்கள். [க]

## சிறுபான்மை சமூகத்தவரும் நீதிபதிகளாக நியமனம்?

புதுடில்லி, ஜூலை 28

இந்தியாவின் நீதிச் சேவையில், சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களையும் நீதிபதிகளாக நியமிப்பது குறித்து ஆலோசனை செய்யும்படி உயர் நீதிமன்றத்தையும், மாநில அரசுகளையும் மத்திய நீதித் துறை அமைச்சர் திரு. ஜெகநாத் கௌசல் கேட்டுள்ளார்.

இந்தியாவில், நீதிச்சேவைக்கு சிறுபான்மைச் சமூகத்தவரை நியமிக்கக் கூடாதென்ற சட்டங்கள் எதுவும் இல்லையென்றும், ஆனுல் அவர்களுக்கும் கூடுதல் அந்தஸ்தை வழங்கும் விதத்திலேயே இது குறித்து ஆலோசிக்கப்படவேண்டுமென்றும் திரு. ஜெகநாத் கௌசல் தெரிவித்தார். [கி]

CENTRIC
சென்ட்றிக் விவசாய பம்ப்.



● உலகப் புகழ் றுபின் பெட்ரல்/மண்ணெண்ணெய் அல்லது யன்மார் டீசல் எஞ்சின் பொருத்தியது.
● நிகர் நிற்க முடியாத எரிபொருட் சிக்கனம். தனித்துவமான தன்னியக்க எரி பொருள் மாற்றும் விசை.
● இடம் மாற்றும் வசதி கொண்ட பாரம் குறைந்தது.
● நிலைத்து நிற்பதற்காக வார்ப்பிரும்பிலும் பித்தளையிலும் உருவானது.
● சென்ட்றிக் - 30 வருடங்களுக்கு மேல் 60,000 பேர் நம்பிப் பாவிப்பது.

விலை: ரூ. 4,750/- முதல்.
1½'', 2'', 3'', 4'' ரகங்களில் கிடைக்கும்.

Mel Ads

ஜினசேன லிமிட்டெட்,
4, உணுப்பிட்டியா வீதி,
கொழும்பு 2.
தொலைபேசி: 26558/9

### மணிவாக்கு

பேருலகிலேயே நமது பூமி ஒரு சிறு நட்சத்திரமாகும். இருந்தும் நாம் விரும்பினுல், யுத்த பீதியின்றியும், பசி பயம் பீடிக்காமலும், அர்த்தமற்ற ஜாதி, நிற, அல்லது கருத்துவேற்றுமையில்லாமலும் இதனை ஒரு கிரகமாக்கிவிடலாம்.

—ஸ்டீபன் வின்ஸெட்பெனட்

# நமது நோக்கு

## தொழிற்சங்க தீர்மானம்

''சத்தியம் என்ருல் என்ன?'' என்று கேலியாகக் கேட்ட பிலாத்து (Pilate) அவ்வினுவுக்கு விடை அறிய விரும்பவில்லை.

யேசுநாதரைச் சிலுவையில் அறையவேண்டுமென்ற முடிவை ஏற்கனவே அவர் எடுத்தபடியால் இக்கேள்வி கேலியாகவே முடிந்தது.

'சுயநிர்ணயம்' என்ருல் என்னவென்று கேலி செய்பவர் எம்மத்தியில்உண்டென்பதைச் சொல்லி வைத்தே, கண்டியில் நடந்த தொழிற்சங்க மகாநாட்டின் தீர்மானத்தை நாம் பாராட்டத் துணிகின்ருேம்.

தமிழ் பேசும் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் புறக்குடத்தில் வார்த்த தண்ணீர் போலிருந்து வருவதால் தமிழ் மக்களுக்கென ஒரு தனிநாடு வேண்டுமென்ற கோரிக்கை பலமடைந்து வருகிறது. இதனை உணராதவர்கள் இந்த நாட்டில் என்ன நடைபெறுகிறதென்பதை அறியாதவர்களே!

நாட்டின் பெரும்பான்மைச் சமூகமான சிங்கள மக்களின் இன்றையதலைவர்கள் எவராவது ''தமிழ் பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்; அவர்களுக்கு சுயநிர்ணய உரிமையை உடன் வழங்கவேண்டும்'' என்ற குரலை எழுப்பியதை நாமறியோம்

''நியாயமான கோரிக்கைகள்'' ''சுயநிர்ணயம்'' என்ற தெளிவற்ற பதங்களை வைத்து பந்துவிளையாடும் தலைவர்கள் அவையெல்லாம் வழங்கப்பட்டு விட்டன என்று சொல்வதும் உண்டு; மாவட்டஅபிவிருத்திச்சபை சுயநிர்ணய அடிப்படையில் அமைக்கப்பட்டதென்று வாதாடும்அரசியல் 'பதர்களும்' உண்டு.

நாட்டின் அமைதியான ஆட்சிக்கு பாதகமின்றி தமிழ்பேசும் மக்கள் தங்கள் அலுவல்களை தாமே நிச்சயிக்கும் அதிகாரத்தை உடன் வழங்க வேண்டுமென்று 40 தொழிற்சங்கங்கள் எடுத்த தீர்மானத்தை நாம் மதிப்புடன் குறிப்பிட வேண்டிய கடமை உண்டு.

இன்றைய இனவேற்றுமை நாட்டை ஒரு பாலைவனமாக மாற்றிக்கொண்டு வருகின்றது. சிங்கள, தமிழ், இஸ்லாமிய இனங்களைச் சேர்ந்த 700 பிரதிநிதிகள் ஒன்றுபட்டு இவ்விதகோரிக்கையை ஜனுதிபதிக்குவிடுத்திருப்பது, இந்தப் பாலைவனத்தில் ஒரு பசும் புற்றரை இருக்கிறதை வெளிப்படுத்துகின்றது.

எந்தநாட்டிலும், எந்தக் காலத்திலும், அரசியல்விடயங்களில் அலுப்புப் பிடித்தவர்கள், விரக்தியடைந்தவர்கள், தாமெடுத்த விடயத்துக்கு வேறு வழியில்லை; தங்கள் 'பாடு' முடிந்தது என்ற மருள்நோக்கம் கொண்டவர்களாக இருப்பது இயல்பு. தீவிரவாதம் வேருரு வழி.

அவ்வித இருளடைந்த நிலையில் ஒரு நம்பிக்கை ஒளியை ஊட்டும் செயலே கண்டியில் நடந்த தொழிற்சங்க மகாநாட்டின் தீர்மானமென நம்ப விரும்புகின்ருேம்.

## தேர்தலில் நிதானம்

ஜனுதிபதி தேர்தல், பொதுத்தேர்தல் பற்றியெலாம் பேசப்படும் போது பாதுகாப்பைப் பற்றி அதிக பிரசாரம் இடம்பெறுகின்றது.

வன்செயல்கள் அதிகரிப்பதால் அது முக்கியத்துவம் பெறுவதுநியாயமே. ஒழுங்கான அமைதியான தேர்தல் நடந்து முடிவதற்கு பொலிஸாரிலும் ராணுவத்தினரிலும் முழுப் பொறுப்பை சுமத்துவது விவேகமாகாது

பொதுமக்கள் கட்டுப்பாடுடன் நடக்கத்தவறினுல இவ்வித பாதுகாப்பு என்செயும்? தேர்தல முடிவுகள்பாதிக்கப்படுவதுநிச்சயம்; சிலதலைகள் உடைபட்டாலும், தேர்தல் முடிவு நிதான மற்றதாகின் மக்களின் உண்மையான தீர்ப்பை அறிவதெங்ஙனம்?

இந்த அடிப்படையில் தேர்தல் ஆணையாளர் சுயாதீனமான பதவி வகிக்க வேண்டிய அவசியத்தை திரு. எஸ். நடேசன் Q. C. கொழும்பு 'வைஎம்சிஏ' பண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் போதிய ஆதாரத்துடன் விளக்கியிருக்கிரு.

தேர்தல் ஆணையாளரின் பதவி நீதியரசரின் பதவிக்கு சமமாகக் கருதப்பட வேண்டுமென்று விளக்கிய திரு. நடேசன் இந்தியாவை உதாரணமாகக் கொண்டு தேர்தல் ஆணையாளர் எவ்விதத்திலும் அரசின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டவராகவோ, அல்லதுஅதன்செல்வாக்குக்குத்தலைபணிபவராகவோ இருக்கக் கூடாதென்பதை வற்புறுத்தியிருக்கிருர்.

பிரபல வழக்கறிஞர்கள் எல்லோரும் என்றும் பக்கம் சாயாது, நடுநிலைமையை கடைப்பிடிப்பவர்கள் என்று நாம் கொள்ளவில்லை; அது பட்டுமல்ல திரு. நடேசன் இந்த அரசுக்கு சார்பாக எதனையும் சொல்ல ஆசைப்படுபவர் என்றும் கொள்ள இடமில்லை.

ஜனுதிபதி ஜெயவர்த்தனுவே அவருடைய கருத்துக்களை கண்டித்திருக்கிருர். ஆனுல் அக்கண்டனம் எல்லாம் ஒரே கேள்வியில் அடங்குகிறது. ''நீங்கள் எல்லாம் முந்திய ஆட்சியில் நடந்த அட்டூழியங்களைப் பார்த்துக்கொண்டிருந்த பேர்வழிகள் தானே?''

எனவே திரு. நடேசன் வெளியிட்ட கருத்துக்களை மக்கள் நன்ருக உரைத்துப் பார்க்கும் அவசியம் உண்டு.

1978ம் ஆண்டு அமுலுக்கு வந்த அரசியலமைப்பின்படி தேர்தல் ஆணையாளரின் பதவிக்கு நிரந்தர பாதுகாப்புஎதுவும் இல்லை. சுகவீனம், அல்லது தேக அல்லது மனப்பலவீனம் காரணமாக நாட்டின் ஜனுதிபதி அவரைப்பதவி நீக்கம் செய்யலாமென்ற விதி வருங்காலத்தில் துஷ்பிரயோகத்துக்கு இடமளிக்கின்றது. இதுவே அவரின் வாதம். இக்காரணங்கள் இந்தப் பொறுப்பான பதவிக்கு பாதகமானவையென நாம் கருத இடமுண்டு.

பொதுமக்கள் நம்பிக்கையை வென்றெடுக்க, தேர்தலில் நிதானம் வலிமையுற தேவையான மாற்றங்கள் கொண்டுவர அரசு தயங்குதல் ஆகாது.

### யாழ்ப்பாணத்துப் பொதுசன நூல்நிலையம்–10

# நூல்நிலையம்கைமாறியபடலம்

சங்கத்தார் நடத்திவந்த நூல்நிலையத்தை நகரசபையாரிடம் கையளித்தல் பற்றிக் காரிய நிர்வாக சபையினர் நிறைவேற்றிய தீர்மானத்தைப் பொதுச்சபையின் கருத்தறிவதற்குக் கூட்டிய விசேட பொதுக் கூட்டம் யாழ் மத்திய கல்லூரியில் 20–12–1934 வியாழக்கிழமை மாலை வணக்கத்துக்குரிய கலாநிதி தம்பையா அவர்கள் தலைமையிற் கூடியது.

தலைவர் அவர்களே நூலகத்தை நகரசபையாரிடம் கையளித்தல் வேண்டும் என்னும் பிரேரணையைப் பிரேரித்தார். அதனை முகாந்திரம் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் அனுமதித்தார். அதுபற்றிப் பலர் தங்கள் கருத்துக்களைச் சாதகமாகவும் பாதகமாகவும் பேசியபின், வாக்கெடுப்புக்கு விட்டபோது பிரேரணைக்குச் சாதகமாக 24 வாக்குகளும் எதிராக 13 வாக்குகளும் கிடைத்தன.

### க.சி. குலரத்தினம்

தீர்மானம் நிறைவேறியபின் தலைவர் அவர்கள் தமது இரண்டாவது பிரேரணையாக மேற்படி சங்கம் 1–1–1935 முதல் குலைக்கப்படவேண்டும் என்று பிரேரித்தார் அதனை அப்புக்காத்தர் கனகநாயகம் அவர்கள் அனுமதித்தார்.

உடனடியாக அதனை எதிர்த்து நூல்நிலையச் சபையைக் குலைத்தலாகாது என்று தெல்லிப்பழை புறொக்ரர் ப. குமாரசுவாமி பிரேரித்தபோது, அதனை நீராவியடி புறொக்ரர் கே. ஐயாத்துரை அவர்கள் அனுமதித்தார். அவரைத் தொடர்ந்து நெவின்ஸ் செல்வத்துரை அவர்கள், கே. வி. இராசையா அவர்கள் சபையைக் குலைத்தலாகாது என்று பேசினுர்கள். இவ்வாருக பலர் அபிப்பிராய பேதங் கொண்டவேளையில், பிரேரணை வாக்களிப்புக்கு விடப்பட்டபோது 23 வாக்குகளால் தோல்வியுற்றது.

பின்னர் காரியதரிசி செல்லப்பா அவர்கள், சங்கத்தாரிடம் இருந்த பணத்தில் இருநூறு ரூபாவைச் சங்கம் கையிருப்பில் வைத்துக்கொண்டு, எஞ்சிய தொகைக்கு நூல்கள் வாங்கி, நூலகத்துக்குக் கொடுத்தல் வேண்டும் எனப் பிரேரித்தார். அதனை அப்புக்காத்தர் கனகநாயகம் அனுமதித்தார்.

ஆனுல் புறொக்ரர் வி. குமாரசுவாமி அவர்கள் பிரேரணைக்கு மாருகப் பிரேரித்ததும், எஸ். இளையதம்பி, கே. வி. இராசையா, பி. ஜி. சுவாம்பிள்ளை முதலானேர் இவரை ஆதரித்துப் பேசினர் முடிவில் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது வாக்குகள் சரிசமமாகக் கிடைக்கவே, தலைவர் தமது வாக்கைப் பிரேரணைக்கு மாருக அளித்ததும் செல்லப்பா அவர்களின் பிரேரணை தோல்விகண்டது.


### இறுதியாகக் கூடிய காரிய நிர்வாக சபை

மத்திய இலவச நூல்நிலையத்தை நகரசபையிடம் ஒப்படைத்தபின்னர் 22–4–35ல் டபிள்யு. டி. நைல்ஸ் அவர்கள் தலைமையில் ஒரு காரிய நிர்வாகசபைக் கூட்டம் நடைபெற்றது அதற்குப் பின்னர் 31–5–1935ல் தலைவர் நீதவான் ஸி குமாரசுவாமி அவர்கள் தலைமையில் இறுதியான நிர்வாகசபைக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் சங்கத்தாரிடம் எஞ்சியிருந்த பணத்தை கிராமசபைகளின் வாசிகசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கலாமா என்னும்விடயம் பேசப்பட்டது. திரு. என். சின்னத்தம்பி அவர்கள் 125/– ரூபாவைக் கிராமச் சங்கங்களுக்கு கொடுக்கலாம் எனப் பிரேரித்ததை க. மு. செல்லப்பா அவர்கள் ஆதரிக்கவே பிரேரணை நிறைவேறியது. பின்னர் ச. மு. செல்லப்பா அவர்கள் அதுகாறும் கௌரவ நூலகராகக் கடமையாற்றிய ஸி. எஸ். இராசரத்தினம் அவர்களுக்குப் பல மாதங்களுக்குப் பொதுவாக 75 ரூபாவை அலவன்சாகக் கொடுக்கலாம் எனப் பிரேரித்தார். இதைப் புறொக்ரர் முருகேசம்பிள்ளை அனுமதித்தார். பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பெற்றது. பின்னர் க. மு. செல்லப்பா அவர்கள் தங்களிடம் எஞ்சியிருந்த பணத்தை வடமாகாண அரசாங்கஅதிபர் மூலம் கிராம சபைகளுக்கு வழங்கவேண்டுமெனப் பிரேரித்தார். இதனை கே. கனகசபை அவர்கள் அனுமதித்ததும், பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பெற்றது பின்னர் தலைவர் ஸி. குமாரசுவாமி தங்கள் சங்கத்தைக் குலைக்கவேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பொதுச்சபை கூட்டப்பெறவேண்டும் என்றும், பிரேரித்த பிரேரணை செல்லப்பா அவர்கள் அனுமதித்ததும் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. இத்துடன் பொதுச்சபை பின்னர் கூட்டப்பெருமலே காரிய நிர்வாகசபைக் கடைசிக் கூட்டத்தோடு, 31–5–35ல் நூல்நிலையச் சங்கம் குலைந்தது.

[தொடரும்]

# முறையாகத் தமிழ் பயின்ற வித்தகர்



யாழ்ப்பாண அரசர்களில் தனிச்சிறப்பு வாய்ந்தவன் பரராஜசேகர மன்னன். அவன் ஒரு தமிழ்ச்சங்கம் நிறுவினுன், அச்சங்கத்தில் அரங்கேறியது தமிழ் இரகுவம்சம். அதனை இயற்றியவர் பரராஜசேகரனின் மருகனுன அரசகேசரி.

1902ல் நாவலர் வித்தியாசாலையில் ஒரு தமிழ்ச்சங்கம் உதயமானது. இது இரண்டாவது சங்கம். இதனைக்கேள்விப்பட்டு இதன் சட்ட திட்டங்களைப்பெற்று உதயமானது மதுரை நான்காவது சங்கம்.

யாழ்ப்பாணத்து இரண்டாவது சங்கத்தில் தலைமைப்புலவர் சுன்னுகம் திரு. அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள். இச்சங்கம் தகுதியான மாணவர்களைச் சேர்த்து, இலக்கண இலக்கியங்களை முறைப்படி கற்பித்துப் பரீட்ஷித்து, பரீட்சையில் தேறியவர்களுக்கு அவர்கள் தகுதிக்குத் தக்கவாறு பாரதி, பண்டிதர் முதலிய பட்டங்களை வழங்கியது பண்டிதர்ப்பட்டம் உயர்ந்தது.

யாழ். தமிழ்ச் சங்கத்தில் புலவரவர்களிடம் முறையாகக் கற்றுப் பண்டித பரீட்சையிற் சித்தியெய்தியவர், அமரர் திரு. சி. கதிரிப்பிள்ளை அவர்கள்.

பிள்ளையவர்களின் சூழல் தமிழ்மயமாயது. பண்டிதர் திரு. வே. சங்கரப்பிள்ளை, பள்ளிப்படிப்பறியாதவர். அவர், பிள்ளை அவர்களிடமே அரிச்சுவடி தொடங்கிப் படித்துப் பிரவேச பண்டிதருமானுர். அக்காலத்தில் ஆசிரிய பயிற்சிக்குச்சேர அது போதுமானது. சங்கரப்பிள்ளை என்னுடன் கோப்பாயில் ஆசிரிய பயிற்சி பெற்ருர்.

### - பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை -

[5ம் பக்கம் பார்க்க]

### நல்லைக்கந்தன் 5-ம் திருவிழா

நண்ணினர்க்கு இனியாய்ஓலம் ஞானநாயகனே ஓலம்
பண்ணவர்க்கு இறையேஓலம் பரஞ்சுடர்மூதலே ஓலம்
எண்ணுதற்கரியாய் ஓலம் யாவையும்படைத்தாய் ஓலம்
கண்ணுதற்பெருமான் நல்கும்கடவுளே ஓலம் ஓலம்

— கந்தபுராணம்

மகாதேவா தாம்போதி அமைப்பு வேலை:

# சிரமதானப்பணி மூலம் நிறைவேற்ற நடவடிக்கை

## சமூக பொதுஸ்தாபனங்கள் பங்குபற்றும்

[யாழ்ப்பாணம்]

மகாதேவா தாம்போதி அமைப்பு வேலைகளை சிரமதானப் பணிமூலம் நிறைவேற்றுவதற்கு, யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு சமூகசேவை ஸ்தாபனங்களதும், மற்றும் பொதுஸ்தானங்களும் ஈடுபட்டுள்ளன.

எதிர்வரும் 31ம் 1ம் திகதிகளில் மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன், மன்னார் அரசாங்க அதிபர் ஆகியோரின் அனுசரணையுடன் மன்னார் மாவட்டத் தொண்டர்களும், அறவழிப் போராட்டக் குழுவின் அதரவில் சாவகச்சேரியைச் சேர்ந்த சுமார் 100 தொண்டர்களும் சிரமதானப் பணியாற்றுவர்.

ஆகஸ்ட் மாதத்தில் வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். மாவட்ட சர்வோதய இயக்கத்தினர் அதன் அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு தலைமையிலும், செப்டம்பர் மாதத்தில் வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ. மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திரு. க சிவானந்த மூர்த்தி தலைமையிலான குழுவினரும் சிரமதானப் பணிகளில் ஈடுபட உள்ளனர்.

இவ் வியக்கங்களை விட மேலும் பல இயக்கங்களும், சமூக சேவை நிறுவனங்களும் சிரமதானப் பணியாற்றுவதற்குச் தமக்குச் சந்தர்ப்பமளிறுக்குமாறு கேட்டுள்ளதாக பூநகரிநெடுஞ்சாலைகள் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. சு இராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கடந்த 23ம், 24ம், திகதிகளில் சிரமதானப்பணியாற்றிய பூநகரி கௌதாரிமுனை கிராமோதய சபை அங்கத்தவர்கள் மத்தியில் நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. சு. இராமகிருஷ்ணன் உரையாற்றுகையில்:–

''போக்குவரத்து சாதன வசதிகள் எதுவுமேயின்றிசுமார் பன்னிரண்டு மைல்களுக்கப்பால் உள்ள கிராமத்திற்குக் கால்நடையாகவே செல்ல வேண்டிய பின் தங்கிய நிலையிலேயே இருந்தாலும், சேவை மனப்பான்மையும், ஒற்றுமையையும் இலட்சியமாகக் கொண்டு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பணியில்இரண்டு நாட்கள் தம்மை அர்ப்பணித்த கௌதாரிமுனை மக்களின் சேவையைப் பாராட்டுகிறோம்'' என்றார்.

கௌதாரிமுனை கிராமோதய சபையின் ஆதரவில் நடைபெற்ற இச்சிரமதானப் பணியில் இக் கிராமோதய சபையின் தலைவர் திரு இரா. பூபாலசிங்கம், கிராம சேவை அலுவலர் திரு இரா வேலுப்பிள்ளை, பெருந்தெருத்திணைக்கள தெற்றில் நுட்ப உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

கௌதாரிமுனை கிராம சேவையாளர் திரு. இரா. வேலுப்பிள்ளை பேசுகையில்:– தமது மக்களுக்கு மகாதேவா தாம்போதியில் சிரமதானப் பணியாற்ற ஆதரவையும், சந்தர்ப்பத்தையும் அளித்தநிறைவேற்றுப் பொறியியலாளருக்கும், சிரமதானப்பணி ஏற்பாட்டுக் குழுவினருக்கும் நன்றியைத் தெரிவித்ததுடன் மகாதேவா தாம்போதியில் சிரமதானப்பணிகள் சிறந்த முறையில் நடைபெறுவதற்கு தமது பூரண ஒத்துழைப்பை நல்கிவரும் நெடுஞ்சாலைத் திணைக்களத்தைச் சேர்ந்த உழவு இயந்திர சாரதிகளையும் பாராட்டினர்.

தேசிய ரீதியில் பங்கு கொண்டு சிரமதானப் பணியாற்றிய முதலாவது கிராமோதய சபை, கௌதாரிமுனை கிராமோதயசபை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பூநகரி பிரதேச சபைத் தலைவர் திரு.பொ. தர்மலிங்கம், சிரமதானத் தொடர்புகள் அமைப்புச் செயலாளர் திரு. இராமகிருஷ்ணன் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்கள். [மா]




# ஆணையாளர் கடிதங்கள்:- சங்கத்தலைவர் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

கடந்த 23ம் திகதி 'ஈழநாடு' 8ம் பக்கத்தில் ஆணையாளரின் கடிதங்களுக்கு நடந்தது என்ன? என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பாக வட்டு. – தொகுதி தெங்குப் பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. சு நடேசு பின்வருமாறு எழுதுகிறார்:–

தங்களின 23–7–82ம் திகதி பத்திரிகையில் வெளியாகிய ''ஆணையாளரின் கடிதங்களுக்கு நடந்தது என்ன'' என்ற செய்தியில் தெ. ப. பொ. உ. கூ. சங்கத் தலைவராகிய நானும் முகாமையாளரும் கடிதங்கள் குப்பைத் தொட்டிகளில் போடப்பட்டதாக கூறியதாகக் குறிப்பிட்டிருக்கிறது.

குறிப்பிட்ட விடயம் தொடர்பாக திரு. பரமலிங்கம் எமக்கு எக்கடிதமும் எழுதியதுமில்லை. ஆணையாளர் எமக்கு எக்கடிதமும் எழுதியதுமில்லை. எனவே நாம் குப்பைத்தொட்டியில் போட்டோமெனக் கூற வேண்டிய நிலைமையும் எழவில்லை என்பதே உண்மை நிலை.

## புங்குடுதீவில் இன்று கலைவிழா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் இன்றுமாலை பரந்த அளவில் கலைவிழா நடைபெறுகிறது.

பிரஸ்தாப வித்தியாலய அதிபர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நிகழும் இவ்விழாவைப் புங்குடுதீவு கொத்தணிப்பாடசாலை அதிபர் திரு. சி. இராசநாயகம் ஆரம்பித்து வைப்பார்.

காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

பல்வேறு இசை, நடன நிகழ்ச்சிகள் இவ்விழாவில் இடம்பெறும்.

''பாடசாலை சமூகத்துக்குத்தான் தொண்டாற்றுகிறது. அதன் வளர்ச்சியில் தாம் செய்யும் பணிதான் மிகவும் முக்கியமானது என உணரும் நிலை உருவாகும்போதுதான் பாடசாலைகளின் உண்மையான வளர்ச்சியை, அவற்றின்பயனை நாடு பெறுகின்றது. இவ்வுணர்வு இன்று எல்லாப்பாடசாலைகளிலும் ஏற்படுகிறது. பெற்றோர் தம் சிறாரின் கல்வியில் ஆர்வம் காட்டுவது எனது பணியை இலகுவாக்குகின்றது. ஆசிரியர்களாகிய நாம் எந்த நோக்கில் பணியாற்றக் கடமைப் பட்டிருக்கின்றோமோ அதனைச் செய்ய எப்பொழுதும் சித்தமாயிருத்தல்வேண்டும் என்று புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு. சி. இராசநாயகம் இக் கலைவிழாவையொட்டி வழங்கியுள்ள வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (அ)

## பாரதிவிழா

(நெடுங்கேணி)

குளவிசுட்டான் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் நூலக ஆரம்ப விழாவும் பாரதி நூற்றாண்டு விழாவும் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறுகிறது அதிபர் திரு. சு. துரைசிங்கம் தலைமையில் நிகழும் இவ்விழாவிற்குப் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. சி. பொ. சிவபாதம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு நூலகத்தைத் தொடக்கிவைப்பார். உப அதிபர் திருமதி. ச. பேரம்பலம் வரவேற்புரை நிகழ்த்துவார். நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பாலசுந்தரம், வட்டாரக் கல்வி அதிகாரி திரு செ. கணபதிப்பிள்ளை ஆகியோர் நூலக ஆசிஉரை வழங்குவர்.

பல கலைநிகழ்ச்சிகளும் நாடகங்களும் இடம்பெறும்.

## முறையாக

(4 –ம்பக்கத் தொடர்ச்சி)

நான் பண்டித பரீட்சையில் சித்தியெய்திய பின்பே பயிற்சிபெற்றேன். எனக்கு முன் வித்துவான் சுப்பையபிள்ளையும் பயிற்சிபெற்றவர். ஆசிரிய பயிற்சித் தராதரப்பத்திரம், கறிக்குத் தாளிதம் போல, பண்டிதர், புலவர் வித்துவான் என்றிருந்தவர்களுக்குச் சிறப்புச்செய்தது.

வெறும் பண்டிதராயிருந்த போது, சாதாரண உபாத்தியாயர் வேலையே வாயாத நான், பயிற்சிபெற்றதும், அந்தக் கணமே சைவாசிரிய கலாசாலையில்விரிவுரையாளர்பதவி கிடைக்கப்பெற்றேன்.

வித்துவான் அவர்களையும் என்னையும் தொடர்ந்து, பண்டிதர் திரு. கதிரிப்பிள்ளை அவர்களுக்கும் ஆசிரிய பயிற்சியில் விருப்பம் உண்டானதில் நூதனம் இல்லை. அவர்கள் சைவாசிரிய கலாசாலையிற் சேரவிரும்பினார்கள்.

சைவாசிரிய கலாசாலை, வயசாலும் அறிவாலும் கூடிய திரு. கதிரிப்பிள்ளை அவர்களை; கௌரவமான முறையில் வரவேற்றுப் பயிற்சிஅளித்து ஆசிரிய தராதரப்பத்திரம் நல்கியது.

வித்துவான் சுப்பையபிள்ளை அவர்கள், பயிற்சிபெற்றதும் சைவாசிரிய கலாசாலையில் விரிவுரையாளராயிருந்து, பின் நாவலர்பாடசாலையில் தலைமையாசிரியராய் தமது சமஸ்கிருத தமிழ் அறிவை நன்கு பயன் பயன்படுத்தினார்.

திரு. கதிரிப்பிள்ளை அவர்கள் பயிற்சி பெற்றதன்பின்பும், அதற்கு முன்பும் பயன்செய்த சரித்திரத்தை அவர் மாணவரும், மகன் முறையினருமான பண்டிதர் திரு. வே. சங்கர்ப்பிள்ளை எழுதுவாராயின் நன்றாக இருக்கும்,

பண்டிதர்திரு. கதிரிப்பிள்ளையின் புதல்வர் திரு. உமாமகேசுவரன். அவருடன்எனக்கு நெருங்கிய பழக்கம் உண்டு அவரைக்காணும்போது,

இரண்டு திருக்குறள் நினைவுக்கு வருவதுண்டு ஒன்று,

'தந்தை மகற்காற்றும்
நன்றி யவையத்து
முந்தியிருப்பச் செயல்'

மற்றையது

'மகன்றந்தைக் காற்றுமுதவி
யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ்
சொல்'

பண்டிதர் அவர்களின் ஆத்ம சாந்தி குறித்து மீண்டும் பிரார்த்திப்போமாக.

## கதிர்காம புராணம்

கலிவலிவெல்லுமாறு கடவுளர் வசித்துப் போற்ற
புலியொடு பசுவே புல்வாய் பொருபகையின்றி வாழக்
கலிவலியணுகலாகாக் கதிர்காம தலத்தின்மேவுங்
கவியுகவரதன் பொற்றுள் கருத்தினில் இருத்தி வாழ்வாம்

- வித்துவான் சி. நாகலிங்கம்பிள்ளை

## "பாதுகாப்புப்பற்றி விவாதிக்கசெல்லவில்லை"

-- இந்திராகாந்தி

புதுடில்லி, ஜூலை 28 பாதுகாப்பு விஷயம் பற்றி விவாதிக்க அமெரிக்கா செல்லவில்லை என அமெரிக்கா புறப்படுமுன் புதுடில்லி விமான நிலையத்தில், பாரதப் பிரதமர் பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியில் தெரிவித்தார்.

அமெரிக்க எவ் 14 ரக விமானங்களைத் தரமுன்வந்தால் அதுபற்றி பரிசீலனை செய்யப்படுமா? என்று நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பாரதப் பிரதமர் மேற்கண்டவாறு கூறினர்.

பல ஆண்டுகளுக்குப் பின் அமெரிக்கா செல்லும் பாரதப் பிரதமர், ஜனாதிபதி றேகனுடன் பல்வேறு விஷயங்கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவார். [க[

## புதிய பொறுப்பதிகாரி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பொ. இராமநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். பொலிஸ் அத்தியட்சகரின் பிரத்தியேக அதிகாரியாக கடமையாற்றிவந்த திரு. பொ. இராமநாதன்; இலங்கையின் பிரதான பொலிஸ் நிலையங்களான கொம்பனித் தெரு, பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரியாகப் பலகாலம் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி

## அணிசேரா மாநாடு: பங்களாதேஷ் அதிபர் யோசனை

டாக்கா, ஜூலை, 28 செப்டம்பரில் ஈராககின்தலைநகரான பாக்தாத்தில் நடைபெறவிருக்கும் அணிசேரா நாடுகளின் உச்சிமகாநாடுஅங்கு நடத்தப்படுவது குறித்து மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று பங்களாதேஷ் இராணுவ நிர்வாகியான லெப்டினட் ஜெனரல் மொஹமெட் எர்ஷாத் கேட்டுள்ளார்.

தற்போது அணிசேரா இயக்கத்தின தலைவராக இருக்கும் கியூபா ஜனாதிபதி திரு. பிடல் காஸ்ட்ரோவுக்கு இதுகுறித்து கடிதமொன்றையும் ஜெனரல் எர்ஷாத் எழுதியுள்ளார்.

அதன் பிரதியை ஈராக்கிய ஜனாதிபதி ஜனுப் சதாம் ஹுசைனுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

அணிசேரா மகாநாட்டை பாக்தாத்தில் நடத்துவதனை மறுபரிசிலனை செய்யவேண்டுமென பங்களாதேஷ் அதிபர் கோரியிருப்பதற்கான காரணம் ஈரானும், ஈராக்கும் கடந்த சிலகாலமாக பெரும் மோதலில் குதித்துள்ளமையே என டாக்காவிலிருந்தும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## சுங்கப்பகுதியினரிடம் கொள்ளை முயற்சி!

சென்னை, ஜூலை 28 தஞ்சாவூரின் கிராமமொன்றில் சுங்கப் பகுதியினரிடமிருந்து 2 லட்சம் ரூபா பெறுமதிமிக்க கடத்தல் பொருட்களை கோஷ்டி ஒன்று கொள்ளையிடமுயன்றதாம்.

சுங்கப்பகுதியினர் கொள்ளையர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம்செய்து அவர்களை விரட்டியடித்தனர் என்றும் பொருள்கள் எதுவும் கொள்ளையடிக்கப்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. [கி]

பாகிஸ்தானில்

## இடைக்கால அரசு நிறுவ கோரிக்கை

ராவல்பிண்டி, ஜூலை 28 பாகிஸ்தானில் இடைக்கால அரசு ஒன்றை நிறுவும்படி தடைசெய்யப்பட்ட 7அரசியல் கட்சிகள் கூட்டாக கோரியுள்ளன.

பாகிஸ்தான் ஜனாதிபதிக்கு, இக்கட்சிகள் எழுதியுள்ள கடிதத்தில்மேற்கண்ட கோரிக்கை விடப்பட்டுள்ளது.

1983 ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் இடைக்கால அரசு அமைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (க)

## வீதியின் அவலநிலை

[சரவணை]

புங்குடுதீவு – ஆலடிச் சந்தியிலிருந்து தெற்குக் கடற்கரைக்குப் போகும் வீதிபலஆண்டுகளாகச் சீர்திருத்தப்படாமையால் வாகனப்போக்கு வரவுக்கு கஷ்டமேற்பட்டுள்ளது.

பிரதான சந்தியான ஆலடிச் சந்தியில் வெளிச்சம் இல்லாமையால் இரவில் போக்குவரத்திற்கு மிகவும் கஷ்டமாய் உள்ளது.

## இளம் பெண் தற்கொலை

[யாழ்ப்பாணம்]

சகோதரனுடன் கொடுக்கல் வாங்கல் காரணமாக ஏற்பட்ட தகராறினல் மனவேதனையடைந்த 27 வயது இளம்பெண் சுருக்கிட்டு தற்கொலைசெய்துகொண்டார்.

புங்குடுதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்த சற்குணநாதன் பவானியின் மரணவிசாரணையில் மேற்கண்டவிபரம் தெரியவந்தது.

புங்குடுதீவு மரணவிசாரணை அதிகாரி திரு. நா. ஆ. நமசிவாயம் மரணவிசாரணை நடத்தினர். விசாரணை முடிவில் தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## தேவாலயம் நிறுவ ஏற்பாடு

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் கிறிஸ்தவ நோயாளர்களும் ஊழியர்களும் வழிபாடு செய்வதற்காக தேவாலயம் ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே இங்கு இந்துக்களுக்காக வைரவவர் ஆலயம் நிறுவப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. [க]

## பெற்றோர் தினவிழா

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி பெற்றோர் தினவிழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திரு. வி. நாகராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி ஜனப் எம். எம். மன்சூர் கலந்து கொள்வார் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. [க]



# வரட்சி நிவாரணம் கோரி பண்டிதர் அவசரத் தந்தி

(யாழ்ப்பாணம்)

''நெடுந்தீவிலும் புங்குடுதீவிலும் கடும் வரட்சி நிலவுவதால் அப்பகுதி மக்கள் உழைப்பும், உணர்வும் இன்றி பெரும் கஷ்டப்பட்டு வருகிறார்கள். எனவே அப்பகுதி மக்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கவும்''.

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவுக்கும், சமூகசேவைகள் அமைச்சர் அசோககருணாரத்தினாவுக்கும் அவசர தந்தி மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். (இ)

## துப்பாக்கி

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறோம்.

''பல தனித்தனி குழுக்களாக இயங்கிய பல கழகங்கள் தமிழீழ விடுதலைக்கழகத்தில் சேர்ந்திருக்கின்றன. பாராளுமன்ற அமைப்பு தேர்தல் முறைமூலம் தமிழ் ஈழம் பெறமுடியாது; தேர்தலை நிராகரிக்கவேண்டியது தான் எமக்கு நல்லது''. [இ]

4-வது வாரம்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்-ஸ்ரீதேவி
குரு (கலர்)

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
ஜெமினி, பத்மினி, எம். ஆர். ராதா, நாகேஷ்
சித்தி
(புதிய பிரதி

ராணி (யாழ் நகர்) 4-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
100வது வெற்றித் திருநாளைநோக்கி
கார்த்திக்-ராதா-தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
29-7-82
சிவாஜி சரோஜாதேவி
பாலும் பழமும்
புதிய பிரதி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர், ஜெயலலிதா, சோ நடித்த
வந்தாளே மகராசி
இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி

இன்று மட்டும்
றீகல் [யாழ்நகர்] தினசரி; 10-30, 2-30, 6-15, 9-30
மோகனப் புன்னகை (கலர்)
30-7-82 முதல் 'கயலும் கயரும்' (மலையாளம் கலர்)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 7-00, 9-30
JIM KELLY in
The Tatoo Connection
(Karate Film)
அடுத்த வெளியீடு! பணமா பாசமா

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்-சாவித்திரி
மகாதேவி

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கல்யாணமாம் கல்யாணம்

ஹரன் (யாழ்ப்பாணம்) Daily 5 Shows
KARRATE WARRIORS
(Strictly for Adults)

# இன்றைய பலன்

ஆடி மாதம் 13-ம் திகதி

வியாழக்கிழமை
(29—7—82)

மேடம்: திடீர் வரவுகளுக்கு இடமுண்டு. வாழ்க்கையிலும் நல்ல திருப்பம் ஏற்படும். எனினும் ஆணவப் போக்கு அடிசறுக்க நேரிடலாம். அவதானம் வேண்டும்.

இடபம்: விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும் மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடலாம். இன்று சும்மாஇருப்பதே சுகம்.

மிதுனம்: தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள். சுற்றுடலில் மதிப்பு உயரும். புண்ணியஸ்தலமொன்றுக்கு யாத்திரை மேற்கொள்ளப்படலாம். நல்ல தினம்.

கடகம்: பூமிவிருத்தியுடன் புதிய தொடர்புகளும் பெருகும். அரசாங்க ஊழியராயின் உத்தியோக உயர்வுக்கு இடமுண்டு. வெளிநாட்டுப்பயணம் மேற்க்கொள்ளப்படலாம்.

சிங்கம்: புதுமையான சம்பவங்கள் நடைபெறும். சிலருக்கு அதிஷ்டலாபங்களுச்கும் இடமுண்டு. விருந்தினர் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

கன்னி: வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம். வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று. பெரியோர்களைப் பகைத்துக் கொள்ளாது நடக்கவும்.

துலாம்: உள்ளத்தில் அடித்தளம் ஊமைக் கண்ணீர் வடிக்கும். வாழ்க்கையில் தனிமரமாகிவிட்ட எண்ணம் உருவாகும். எதையும் தாங்கும் இதயம்வேண்டும்.

விருட்சிகம்: குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம் பெறும். வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சிகரமான செய்தியொன்று கிடைக்கலாம். பணவரவுக்கு இடமுண்டு.

தனு: ஆபத்துமிகவும் உண்டு. அடுத்துக்கெடுப்பவர் அருகிலேயே இருப்பர். எதையும் ஆராய்ந்து பார்ப்பதே நன்று. கடமையில் கவனம் வேண்டும்.

மகரம்: தாய்வழியால் பெருமைகள் சேரும். தனத்துடன் வாழ்வும் கிடைக்கும். எதிரிகள்கூட உங்களை வரவேற்பார்கள். மகத்தான தினம்.

கும்பம்: காரியங்கள் அனைத்திலும் கைகொடுப்பதற்கு வீட்டிலுள்ள அனைவரும் முன்வருவார்கள். இதயத்தில் இன்பத்தின் ரேகைகள் படரும்.

மீனம்: ஏமாற்றத்திற்கு இடமுண்டு. எனினும் இருள் ஆழ்ந்த நிலையிலும் ஒளிக்கோடுகள் தென்படலாம். இன்று அதிக முதலீட்டைத் தவிர்க்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## திருவிழா

[சரவணை]

சரவணை-தேவபுரம் ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி கோவில் வருடாந்த 'திருவிழா' கடந்த 26ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 4ம்திகதி நடைபெறும் தேர்த் திருவிழாவையடுத்து. மறுதினம் தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

## வாசிகசாலை இல்லை

(சரவணை)

சரவணை மத்தியில் பலஆண்டுகளாக நடைபெற்று வந்த வாசிகசாலை தற்போது மூடப்பட்டுள்ளதால் இளைஞர்கள், மாணவர்கள் கவலையடைந்துள்ளனர். (அ)

### கரம்பொன்

# குடிதண்ணீர் விநியோகம்: அரச அதிபருக்கு புகார்

(யாழ்ப்பாணம்)

கரம்பொன், மெலிஞ்சிமுனை, ஆஸ்பத்திரி வீதி, ஒழுவில் வீதி, அயிக்ராம்புலம் ஆகிய பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்குமாறு ஊர்காவற்றுறை அரசாங்க அதிபருச்கு உத்தரவிடப்பட்டும் விரைவில் அப்பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படும் என எனக்கு 1-7-82ல் அறிவிக்கப்பட்டிருந்தும் இன்றுவரை தண்ணீர் வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் மீண்டும் முறையிட்டுள்ளனர்கள்.

நீர் வழங்குவதை வேண்டுமென்றே இல்லாது காலந்தாழ்த்தி மக்களைப் பழிவாங்குவது மன்னிக்கமுடியாதசெயல் எனவே தண்ணீர் எப்போது கொடுக்கப்படும் என்பதை அறிவியுங்கள்.

ஊர்காவற்றுறை எம். பி.

(8-ம் பக்கம் பார்க்க)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB 1028/71

1. ஆறுமுகம் நவரத்தினமும் 2. பெண் ஈஸ்வரியும்
வேதரடைப்பு கரைநகர் வடக்கு, காரைநகர்
வழக்காளி

எதிராக

பொன்னையா செல்லத்துரை
விளானை. கரைநகர் கிழக்கு, கரைநகர்
எதிராளிகள்

ஊர்காவற்றுறை டிஸ்திறிக்கோட்டில் MB 1028/71ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1982ஆம் ஆண்டு ஆவணி மாதம் 5ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10-45 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்றுபிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 14100/- 2-10-78 தொடக்கம் 28-8-80 வரைக்கும் ரூபா 10000க்கு 12% வீத வட்டியும் பின் முழுத்தொகையும் இறுக்கும் வரைக்கும் 12% வீத வட்டியும்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு மேற்கிறை

மாணுக்கை நெ. பர. 10 பத்து எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை சதாசிவத்தினுதனம் வடக்கு பாலாவோடை அம்மன் கோவில் ஆதனம் கனகசபை திருநாவுக்கரசுவினுதனமும் மேற்கு சண்முகம் இராசலிங்கத்தின் ஆதனம் தெற்கு சண்முகம் இராமலிங்கத்துக்கும் சின்னத்துரை பெண் காமாட்சிக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலும்.

சி. சோ. நரசிங்கம் (ஜே. பி.)
நீதிமன்ற விற்பனையாளரும்
மதிப்பாளரும்

தொல்புரம்
28-6-82 (4019)

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

இல. ஈடு/ 1508

1. அழகரத்தினம் சண்முகநாதன், பொற்பதி ரேட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். —வழக்காளி

எதிராக

1. நாகலிங்கம் தம்பிஐயாவும் பெண்
2. இராசம்மாவும்

கொக்குவில் கிழக்கு, கொக்குவில் —எதிராளிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக்கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் 1982ம் ஆண்டு ஆவணி மாதம் 20ந் திகதி (20-08-82) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 10016/-வும் மேலும் 6000/-ற்கு வருடமொன்றிற்கு நூற்றுக்கு 24% வட்டிவீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1981ம் ஆண்டு மாசி மாதம் 3ந் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1981ம் ஆண்டு நவம்பர் மாதம் 4ம் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12% வீதவட்டியும் வழக்கு செலவு ரூபா 2060-40. (இதில் நடைபெற்ற செலவு 1064-60. நடைபெற வேண்டிய செலவு ரூபா 345-80. மேலதிக சமயாசமய செலவு ரூபா 650/-) கொடுக்கவேண்டியிருப்பதாலும் இதில் வட்டிப் பணத்தில் ரூபா 120/- கொடுபட்டுள்ளது இதைக் கழிக்கவும்.

### குறித்த ஆதனடாப்பு

1ம் ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று கொக்குவில் கிழக்கு இறை: ''பலைய குடியிருப்பு'' நி. பர. 3 குளி 2. 3க்கும் எல்லை கிழக்கு புதிதாக வைக்கப்பட்ட பாதை வடக்கு மிகுதியாதனமான 1-ம் துண்டு மேற்கு ஜே. எஸ். செல்வரத்தினத்திற்குமுரிய ஆதனம் தெற்கு 5ம் துண்டாகிய மிகுதியாதனம் இதடங்கலும்.

2ம் ஆதன இடாப்பு

மேற்படி இறை: ''பிராயன் கட்டையடி'' நில. பர. 2 குளி 7. இதற்கு எல்லை கிழக்கு ரேட்டும் துண்டுகள் 10 ''ஏ'' யும் 10 ''ஜி'' யும் வடக்கு துண்டுகள் 2, 7, 8, 10 ''பி'' யும் 5ம் மேற்கு வேலாயுதபிள்ளை பெண் இரத்தினம்மாவினதும் மறுபேரினதும் ஆதனம் தெற்கு 1ம் ஆதனடாப்பில் விபரிக்கப்படும் ஆதனமும் உமாபதி மகாலிங்கமும் பெண் விமாலாவதியின் ஆதனமும். இதடங்கலால் இராசையா செல்வரத்தினத்துடன் உமாபதி மகாலிங்கமும் விமலாவதியுடனும் சேர்ந்து தடையற்ற சுதந்திரபாவிப்பு போக்குவரவு உரிமையும்.

சி. ஆ. த. வடிவேலு ஜே. பி.,
L. I. V., S. C. V.,
நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

''வடிவேல் உதயம்'',
காங்கேசன்தறை வீதி,
கோண்டாவில்.
28-6-82.

4016

★ காங்கேசனிலிருந்து காரைநகர் புறப்பட்ட

# 2 வள்ளங்களைக் காணவில்லை!

# 9 பேர் நிலை தெரியவில்லை!

## கடற்படையினர் தேடுதல் வேட்டை

[யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து காரைநகர் நோக்கி 9 பேருடன் வந்த இருவள்ளங்கள் பலத்த காற்றினுல் நத்தளித்து தடுமாறி திசைமாறி சென்று விட்டன, கரைநகர் கடற்படையினரும் தனிப்பட்ட படகுக் காரர்களும் கடந்த 2 நாட்களாக பலத்த தேடுதல் நடத்தியும் அவர்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

காணுமல் போன 178659 இலக்கம் கொண்ட வள்ளத்தில் க' கந்தசாமி, க. தேவகனிராசா, தி. கமலநாதன், மணி, தவச்செல்வன், சி பேரின்பநாதன் ஆகியோரும் 'ஆரிய மாலா' என்ற வள்ளத்தில் பொ சிவனடியார், குஞ்சு, நாகமணி ஆகியோரும் சென்றதாக கூறப்படுகிறது.

### அரசு அதிபருக்கு தகவல்

வள்ளங்கள் திசைமாறிச் சென்றதுபற்றி தகவல் கிடைத்ததும் தோப்புக்காடு முருகன் வத்தைத் தொழிலாளர் சங்கத்தினர் யாழ். அரசாங்க அதிபர் திரு.தேவநேசன் நேசையாவுக்கும், யாழ். எம். பி. திரு வி.யோகேஸ்வரனுக்கும், மேலதிக அரசாங்க அதிபர் திரு எஸ் தர்மபாலனுக்கும். காரைநகர் கடற்படை, இந்திய கடற்படைக்கும் அறிவித்துள்ளனர்.

காணுமல்போன ஒருவள்ளம் தோப்புக்காடு ஆ. வடிவேல் முருகனுக்கும், மற்ற வள்ளம் கப்பல் ஏஜென்ட் திரு ஜெய பாலசிங்கத்திற்கும் சொந்தமானதாகும்.

### தொழிலாளர் புறப்பட்டனர்

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்த அரிசிக்கப்பலிலிருந்து யாழ். மாவட்ட கூட்டுறவு துறைமுக சேவை சமாசந்தைச் சேர்ந்த மேற்படி தொழிலாளர்கள் அரிசிமூடைகளை இறக்கியபின் இம்மாதம் 26ம் தேதி இரவு 10 மணிக்குப் பின்னர் தங்கள் சொந்தஇடங்களுக்கு வள்ளத்தில் புறப்பட்டனராம்.

காரைநகர் தோப்புக்காட்டைச் சேர்ந்த தொழிலாளர்கள் 4 வள்ளங்களில் அன்றிரவு 11 மணிக்கு காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து புறப்பட்டு காரைநகர் நோக்கி சென்றுகொண்டிருந்தனர்.

மாதகல் துறைப்பகுதிக்கு வந்தபோது கடல் கொந்தளித்துப் பெரும் காற்று வீசியதால் வள்ளங்களைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர முடியாமல் திண்டாடி, திணறி நங்கூரமிட முயற்சித்தனராம். 2 வள்ளங்கள் மட்டும் நங்கூரமிடப்பட்டு நிறுத்தப்பட்டதென்றும் மற்றும் இரு வள்ளங்கள் நங்கூரமிடமுடியாமல்போகவே, திசைமாறி இந்திய திசையை நோக்கிச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

27-ம் திகதி காலை நங்கூரமிடமிடப்பட்ட வள்ளத்தில் சென்ற தொழிலாளர், சம்பவத்தைதோப்புக்காட்டிலுள்ள குடும்பத்தினருக்குத் தெரிவித்ததைத்தொடர்ந்து உடன் நடவடிக்கை எடுககப்பட்டது. முதல் வள்ளத்தில்சென்றவர்களில் நால்வருக்கு திருமணமாகி குழந்தைகள் உண்டென்றும் மற்றப்வள்ளத்தில் சென்றஇருவருக்கு திருமணமாகிகுழந்தைகள் உண்டென்றும் கூறப்படுகிறது.

சம்பவத்தைக் கேள்வியுற்றதைத் தொடர்ந்து தோப்புக்காடுப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. காரைநகர் கடற்படையினரும், மையிலிட்டியைச் சேர்ந்த 2 படகும், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஒரு படகும் தேடுதல் நடத்திவருகின்றன. (ஈ

---


### நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

எங்கள் குலதெய்வமாய் வந்து பேரொளி தந்த கந்தப்பு - சின்னத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் பிரிவுத்துயர் கேட்டு எமது இல்லம் நாடி வந்து எமது துக்கத்தில் கலந்து கொண்ட உற்றூர், உறவினர், அயலவர், நண்பர்கள், அனைவருக்கும் தபால், தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்த அன்பர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றி அறிதலைக் தெரிவிக்கின்றோம். மேலும் அன்னரது அந்தியேட்டி 1-8-82 லும் வீட்டுக்கிரியை 2-8-82 திங்கட்கிழமை நண்பகலிலும் நடைபெறும். தொடர்புடைய அன்பர்கள் தயவு செய்து வீட்டுக்கிரிகையில் கலந்து சிறப்பிக்குமாறு பணிவுடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. 4028


### ஜனதிபதி. ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. சிவசிதம்பரம் எம்,பி. தொடர்ந்து கூறியதாவது: 'எமது மத்தியில் ஒற்றுமை அவசியம்வேண்டும். 1976-ம் ஆண்டிலும் இப்படி ஒற்றுமை குலைவு ஏற்பட்டு சிரமத்தின் மத்தியில் ஏற்படுத்தினேம். இன்றும் அந்த நிலை ஏற்பட்டுள்ளது. கட்சியின் இலட்சியத்தில் வேற்றுமைகள் ஏற்பட்டு ஒற்றுமை குலைவு ஏற்பட்டாலும்கூட ஓரளவு சமாளித்துக்கொள்ளலாம். ஆனல் இது அப்படி இல்லை. ஒற்றுமையை நிலைநிறுத்த கூடிய முயற்சிகளை நாமும்கையாண்டு வருகிறேம். அனைவரும் இதற்காக உழைக்கவேண்டும்.

நாங்கள் கோவை மகேசன், ஈழவேந்தன் ஆகியோருடனும் இதுபற்றிப் பேசியுள்ளோம். இருந்தும்கூட சில விஷயங்களில் இன்னும் உண்மைக்குப் புறம்பாகவே செய்திகள் வருகின்றது.

நாம் ஜனதிபதியுடன் என்ன பேச்சுவார்த்தை நடத்துகிறேம் என்பது பலருக்கும் தெரியவேண்டும்.

மாவட்ட அபிவிருத்தி சபைக்கு 15 அதிகாரங்களை அவர்களாகவே கொடுத்திருக்கிறர்கள். அந்த அதிகாரங்களை சட்டப்படி தரவேண்டும்; வன்முறையை சமாளித்தல்; அநீதி தலை தூக்குமிடத்தில் நீதி வழங்கக் கோரல்; மாவட்ட சபைக்கு உள்ள அதிகாரங்களை அங்கீகரித்து சட்டப்படுத்தல் ஆகியவற்றைத் தவிர நாம் வேறு எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை. எனவே எமது கட்சியில் ஒற்றுமை வளர ஒவ்வொருவரும் தமது பங்களிப்பைச் செய்யவேண்டும் என்ருர்..

---

## இப்படியும் நடக்கிறது

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த அவர், ஒரு லொறி முதலாளி.

அவசரம் அவசரமாக அவர் தனது 'ஷேர்ட்'டை சலவைத் தொழிலாளியிடம் ஒப்படைத்தபோது, அவருக்கு வேறு நினைவுகள் வரவில்லை,

ஆயிரத்து இருநூறு ரூபா திடீரெனக் காணுமற்போன போதுகூட அவருக்கு எதுவும் தோன்றவில்லை. எங்கேயோ தொலைந்துவிட்டதாகவே அவர் எண்ணினர்.

ஒரு வாரம் கழிந்தது. சலவைத்தொழிலாளியிடம் அந்த முதலாளி 'ஷேர்ட்'டைப் பெற்றுக்கொள்ளச் சென்ருர். 'ஷேர்ட்'டுடன், ஆயிரத்து இருநூறு ரூபாவையும் அந்தத் தொழிலாளி கையளித்தபோது.. . !

உள்ளத்தால் உயர்ந்துவிட்ட அந்த மட்டுவில் சலவைத் தொழிலாளியின் பெயர் க. விநாயகமூர்த்தி!

0 0 0 0

வெளிநாட்டிலிருந்து ஊர் திரும்பிய நண்பர் ஒருவர் சொன்னர்...

''நல்லூர் முருகனைத்தரிசிக்கும் பக்தர்கள் பய பக்தியுடன் காணப்படுகின்றர்கள்,''

'ஊடுருவி'

---

### கலையரசுக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ராஜகோபால் ஆகியோரும் திரு. வேதநாயகத்துடன் கொழும்பிலிருந்து வந்த காரில் வந்து கலையரசுவின் பூதவுடலுக்குத் தமது அஞ்சலியைத் தெரிவித்தனர்.

முஸ்லிம் கலைஞர்களின் பிரதிநிதியாகத் தாம் கலந்து கொண்டு அஞ்சலியைத் தெரிவிப்பதாக ஜனப் ஜவாஹர் அங்கு நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் தெரிவித்தார். கலைஞர் கலைசெல்வனும் கலந்து கொண்டு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

### யாழ். நகரில்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி]

சஞ்சிகைகள் பத்திரிகைகள் குறித்தும் இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டது.

திரு. பாண்டியன் யாழ்ப்பாணம் வந்ததும் மறைந்த கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் ஆர். பூபாலசிங்கம் வீட்டுக்குச் சென்று தமது அனுதாபத்தைத் தெரிவித்தார்.

### மாவட்ட

[1ம் பக்கத் தொடர்ச்சி]

''அமைச்சரின்கூற்று ஒரு குழப்பநிலையை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே அமைச்சரின் கூற்றை எப்பத்திரிகைகள் பிரசுரித்தனவோ அப்பத்திரிகைகள் அனைத்திலும் அமைச்சர் தனது கூற்றை வாபஸ்பெற வேண்டும். அவர் வாபஸ் பெறும்வரை நான் மாவட்ட சபையை கூட்டமாட்டேன்'' என்று திரு. சம்பந்தமூர்த்தி தெரிவித்தார்.

இவ்விவகாரம் சம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆகியோர் உள்ளடக்கிய உயர் மட்டக் குழு ஒன்று ஜனதிபதியைச்சந்தித்து அவரின் கவனத்திற்கு கொண்டுவந்திருப்பதாகவும் திரு. சம்பந்தமூர்த்தி மேலும் தெரிவித்தார்.

### காங்கேசன்துறை

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பகுதியை மீட்டதுடன் மூவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

அச்சமயம் நீதிபதி ஆகஸ்ட் 2-ம் திகதிவரை இவர்களை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதனையடுத்து காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலை வளவினுள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் விடுதிக்கருகில் சாக்கில் சுற்றியபடி பார்சல் ஒன்று காணப்பட்டதாம்.

அதனை ஆராய்ந்த சமயம் அது திருட்டுப் பொருளின் மிகுதியே எனத்தெரிய வந்தது. (இ)

---


# ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

## புதிய உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 8-00 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னுதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 370—438—537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி.
தொலை பேசி இல; 273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) ஸ்ரீமணிமலர் ஸ்டோர்ஸ்
இல: 157/2, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு—11
தொலைபேசி இல: 23277

(5) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல; 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866


### கப்பல் சேவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. நடராசா இதற்குப் பதிலளித்துப் பேசுகையில் கூறியதாவது:

''காங்கேசன் துறைக்கும் நாகபட்டினத்துக்குமிடையே கப்பல்சேவை நடாத்துவதென்ற சகல முடிவுகளும் எடுத்துவிட்டோம்.

''சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர், துறைமுகக் கூட்டுத்தாபனத்தலைவர், தொழில் ஆணையாளர் ஆகியோரையும், வர்த்தக கப்பல்துறை அமைச்சரையும் சந்தித்து, அவர்களின் அனுமதிபெற்று, பல திட்டங்களையும் வகுத்துள்ளோம்.

### குடிதண்ணீர்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டிதர் கா. பொ. இரத்தினம் இவ்வாறு கோரும் கடிதம் ஒன்றை யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவுக்கும், யாழ். சமூக சேவைகள் அமைச்சர் அசோகா ககனுர திரு ஆகியோருக்கும் அனுப்பியுள்ளார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்ஹோவல் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூ ஜூலை மீ 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49 Tleegram: 'Eelanadu' T'phone: 389 and 8126